**கவனிக்க.-** 2007.11.30 ஆந் திகதிய வர்த்தமானியில் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1527 - 2007 දෙසැම්බර් 07 වැනි සිකුරාදා - 2007.12.07

1527 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1135 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**கவனிக்க.**-(i) கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தம்) சட்டமூலம் 2007, ஒற்றோபர் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2007, ஒற்றோபர் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2007, ஒற்றோபர் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, திசெம்பர் 14 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, நவெம்பர் 30 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்த்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்:**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள்:**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டு பிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் பதவி – இரத்தினபுரி மாவட்டம்

**இரத்துச் செய்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2007 ஆம் ஆண்டு ஆனி மாதம் 22 ஆந் திகதிய 1503 ஆம் இலக்க வர்த்தமானியில் பகுதி I : தொகுதி ( IIஅ) வில் என்னால் பிரசுரிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்தின் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரும் விளம்பரத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் பிரிவில் மட்டும் 2007.04.18 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின்படி பதில் கடமையாற்றும் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் தமது பதவிகளில் நிரந்தரமாக்கப்படுவதன் காரணமாக விண்ணப்பம் கோரும் அறிவித்தலை இரத்துச் செய்கிறேன்.

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர்* | *விண்ணப்பம் கோரப்பட்ட பிரிவும் பதவியும்* |
|---|---|---|
| 1. இரத்தினபுரி | கொலன்ன | கம்பனே பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கொலன்னா கோறளை பிரிவின் விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி. |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2007, நவெம்பர் 19.

12-73

---

## பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு

பதிவாளர் நாயகம் திணைக்களம்

**பதிவாளர் சேவையின் I ஆம் தரத்திற்கான பதவி**

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பதிவாளர் சேவையின் I ஆம் தரத்திற்கான பதவிகளுக்காக இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கிணங்க தயாரிக்கப்பட்டு 2007, திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்.**– இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்திற்குட்பட்டது.

3. **சம்பளங்களும் கொடுப்பனவுகளும்.**– இப்பதவிக்கு உரிய சம்பள திட்டம் இதுவாகும்.– ரூ. 22,935-10x645-8x790-17x1050- ரூபா 53,555.

4. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்.**– பதிவாளர் நாயகம் திணைக்களத்தில், பதிவாளர் சேவையின் II ஆம் தரத்தில் எட்டு (8) வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவைக்காலத்தை நிறைவு செய்து இருக்கும், உரிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தியுள்ள அலுவலர்களாயிருத்தல் வேண்டும். (1989.04.25 ஆந் திகதிக்கு முன்னமைந்த பதிவாளர் சேவையின் சேவைக்காலம், பதிவாளர் சேவையில் II ஆம் தரத்தின் சேவைக் காலமாக கணக்கெடுக்கப்படும்)

**ஆட்சேர்ப்பு முறை.**– இப்பதவிக்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவது அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையின் விதந்துரைப்பின் பேரிலாகும்.

5. இது தொடர்பான விண்ணப்பங்கள் யாவும் பதிவாளர் நாயகத்துக்கூடாக அனுப்பப்படல் வேண்டும்.

6. விண்ணப்பப்படிவங்களும், இது தொடர்பான ஏனைய கடிதங்களும் அனுப்பப்பட வேண்டியது எனக்காகும். அவை இவ்வமைச்சின் எந்தவொரு அலுவலரினதும் பிரத்தியேக பெயருக்கு அனுப்பப்படக்கூடாது.

7. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (IIஅ) பிரிவின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனைகள் இந் நியமனத்துக்கும் ஏற்புடையதாகும்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 7,
2007 நவெம்பர் 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு**

பதிவாளர் நாயகம் திணைக்களம்

***பதிவாளர் சேவையின் I ஆம் தரத்திற்கான பதவி***

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.

(ii) முதல் எழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :-----.

2. (i) அலுவலக முகவரி :-----.
(ii) சுய (தனிப்பட்ட) முகவரி :-----.

3. இனம் :-----.

4. (i) பிறந்த திகதி :-
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.
(ii) விண்ணப்ப முடிவு திகதியில் வயது :-
வருடங்கள்:-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

5. (i) தற்போதைய தரம் :-----.
(ii) தற்போதைய தரத்தில் நியமனம் பெற்ற திகதி :-----.
(iii) விண்ணப்ப முடிவுத் திகதியில் தற்போதைய தரத்தின் சேவைக்காலம் :-----.
(iv) சேவையில் விடுபாடு ஏற்பட்டுள்ளதா ? :-----.
(v) வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்திய திகதி :-----.

6. குடியியல் நிலை :-----.

7. சித்தியெய்திய அதியுயர் பரீட்சையும் மொழி மூலமும் :-----.

8. கடந்த 5 வருடங்களுக்கான சம்பள ஏற்றத்தைப் பெற்றுள்ளீர்களா ? :-----.

9. தங்களுக்கெதிராக ஒழுக்காற்று விசாரணை உள்ளதா ? :-----.
அப்படியாயின் விபரம் :-----.

10. நற்சான்றுகள் :-----.

விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையும் என இத்தால் உறுதிமொழிகின்றேன். பிழையானதும் தவறானதுமான விபரங்களைச் சமர்ப்பித்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டால் நான் தகுதியற்றவனாவேன் என்பதையும் குற்றங்கள் நியமனத்தின் பின் கண்டுபிடிக்கப்பட்டால் எந்தவிதமான நட்டஈடுமின்றி வேலை நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நானறிவேன்.

.......................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

17. **திணைக்களத் தலைவரின் விதப்புரை**

.......................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(முத்திரை)

திகதி :-----.

12-179

---

## வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு

நிலையான புகைப்படக் கலைஞர் - தரம் III பதவி

வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சின் III ஆம் தரத்திலான நிலையான புகைப்படச் சிற்பி பதவிக்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணபங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2007.12.31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னராக "செயலாளர், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சு, 2 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணபப்பத்திரம் அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிலையான புகைப்படச் சிற்பி - III ஆந் தர பதவி" என்பதனைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**குறிப்பு**.-(அ) காட்டப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பங்கள் தபாலின்போது இழந்துபோனது அல்லது தாமதித்தல் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் பற்றிக் கவனம் செலுத்தப்படமாட்டாது.

(இ) ஏற்கனவே பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) இந்தப் பதவிக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை 1 ஆகும் (ஒன்று).

2. **சேவையில் நியமிப்பதன் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**.- (அ) இந்தப் பதவி நிரந்தரமானது. இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரியது. விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள முறைக்கு சந்தாப்பணத்தைச் செலுத்த வேண்டும். நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்திற்குரியது.

(ஆ) இந்த வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (IIஅ) பந்தியின் ஆரம்பத்தில் காட்டப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகள் அதிகாரம் செலுத்துவதாய் அமையும்.

(இ) அரச கரும மொழிக் கொள்கைக்கிணங்கவும் அரச நிருவாக சுற்றறிக்கை இல. 7/2007 இன் பிரகாரமும் அரசகரும மொழித் தேர்ச்சி உரியகால எல்லைக்குள் பெறவேண்டும்.

3. **சம்பளமும் படிகளும்**.- பதவிக்குரிய மாதாந்த சம்பளம் பின்வருமாறு :-
(அ) ரூபா 14,000-10x120-11x140-6x210-14x290- ரூபா 22,060. (III/II 'ஆ' தரத்திற்காக ஏற்புடையது)

(ஆ) அரச நிருவாக சுற்றறிக்கை இல. 6/2006 இன் பிரகாரம் (MTI - 2006)

(இ) III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுபவர்கள் III ஆம் தரத்திற்கேற்ப ரூபா 14,000-10x120 - ரூபா 15,200 சம்பளத் திட்டத்தின் ஆரம்ப சம்பளத்தளத்தில் வைக்கப்படுவார்கள்.

(ஈ) நியமனம் பெற்று 3 ஆண்டுகளுக்கு முன்னர் வினைத்திறமைப் பரீட்சையில் சித்தி அடைய வேண்டும். வயதை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறமைப் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படமாட்டாது.

4. **தேவைப்படும் தகைமைகள்**.- (அ) இலங்கைப் பிரசையாக இருத்தல்.

(ஆ) சிறந்த ஒழுக்கநெறியுடையவராகவும் நல்ல தேகாரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) 2007.12.31 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு மேற்பட்டிருக்க வேண்டியதுடன் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க, உள்ளூராட்சி சேவையில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதாகாது.)

5. **கல்வித் தகைமைகள்.**- (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் உட்பட 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது சித்தியடைந்திருத்தல். (ஒரு தடவையில் ஆகக்குறைந்தது 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

அல்லது

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட பாடங்களுட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் தேசிய பொதுக் கல்விச்சான்றிதழ் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (ஒரு தடவையில் ஆகக்குறைந்தது 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்)

6. **தொழிற் தகைமைகள்.**- (அ) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையொன்றில் அல்லது தொழிற்கல்வி வித்தியாலயமொன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனமொன்றில் இருந்து வழங்கப்பட்ட புகைப்படவியல் சம்பந்தப்பட்ட டிப்ளோமாச் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கல்வி சம்பந்தப்பட்ட நிறுவனமொன்றில் வழங்கப்பட்ட புகைப்படவியல் சம்பந்தமான ஓராண்டிற்குக் குறையாது அரைநேர தொழிற்பாடத்திட்டமொன்றை வெற்றிகரமான முறையில் பயின்று சான்றிதழ்களைப் பெற்றிருத்தல்.

7. **அனுபவம்.**- ஒரு புகைப்படக் கலைஞராக 5 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ்கள் மூலம் அதனை நிரூபிக்க வேண்டும்)

8. **ஆட்சேர்ப்பு முறை.**- நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமும் செய்முறைப் பரீட்சையொன்றின் மூலமும் ஆட்சேர்க்கப்படுவார்கள்.

டபிள்யு. பி. கணேகல,
செயலாளர்,
வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு.

வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு,
2 ஆவது மாடி,
"செத்சிறிபாய",
பத்தரமுல்ல,
2007 நவெம்பர் 9.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு**

*நிலையான புகைப்படக் கலைஞர் - தரம் III பதவி*

1. முழுப் பெயர் (தெளிவாக) திரு./திருமதி/செல்வி :-----.

2. முதல் எழுத்துக்களுடன் பெயர் :-----.

3. முகவரி (முகவரி மாறினால் அதனை உடனே அறிவித்தல் வேண்டும்) :-----.

   (அ) தனிப்பட்ட முகவரி :-----.
   தொலைபேசி இல. :-----.

   (ஆ) அலுவலக முகவரி :-----.
   தொலைபேசி இல. :-----.

4. (அ) பிறந்த திகதி :-----.
   ஆண்டு மாதம் திகதி

   (ஆ) விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு வயது :-----.
   வருடங்கள் மாதங்கள் நாட்கள்

   (இ) தேசிய அடையாள அட்டையின் இலக்கம்

5. நீர் இலங்கைப் பிரசையா :-----.

6. (அ) பால் (ஆண்/பெண்) :-----.
(ஆ) திருமணமான/திருமணமாகாத தன்மை :-----.

7. பின்வரும் பாடங்களில் சித்தியடைந்துள்ள உயர் பரீட்சை :-
4. சிங்களம் :-----.
5. தமிழ் :-----.
6. ஆங்கிலம் :-----.

8. கல்வி/தொழிற் தகைமைகள் :-----.

8.1 க. பொ. த. (சா. த.) /தே. பொ. க. சா. பரீட்சை :-

ஆண்டு :-----. சுட்டெண் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

8.2 க. பொ. த. (உ த.) பரீட்சை :-

ஆண்டு :-----. சுட்டெண் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

8.3

| பட்டம்/டிப்ளோமா | ஆண்டு | பாடங்கள் |
|---|---|---|
| | | |

9. ஏற்கனவே சேவை பார்ப்பதெனின் அதுபற்றிய விபரங்கள் :-----.

| நிறுவனம் | பதவி | இருந்து | வரை | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|---|
| | | | | |

10. தொழிலிற்குரிய பிற தகைமைகள் :-----.

11. நீர் ஏதேனும் குற்றத்திற்கு எப்போதாவது நீதிமன்றமொன்றில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தீரா ? :-----.

12. நீர் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளீரா என்பது (எனின் விபரங்கள் தருக.) :-----.

13. பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப்பிரதிகள் அல்ல) இணைக்கப்பட்டுள்ளன:-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்வித் தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள் ;

(இ) தொழில் சம்பந்தப்பட்ட சான்றிதழ்கள் ;
(ஈ) அனுபவம் சம்பந்தப்பட்ட சான்றிதழ்கள்.

14. உங்களைப்பற்றிய விபரங்களை அறியக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர்களும் முகவரிகளும் (தொலைபேசி இலக்கங்களுடன்) :-
(1) :-----.
(2) :-----.

15. உரிய பிற தகவல்கள் :-----.

16. இந்த விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்கள் ஏதேனும் உண்மையற்றதென அல்லது பிழையானவையென என்னைத் தெரிவுசெய்ய முன்னர் கண்டுபிடிக்கப்படின் நான் தகுதியற்றவனாவேன் எனவும், நியமனத்திற்குப் பின்னர் அது கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடும் வழங்காமல் பதவியிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

.......................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

17. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(விண்ணப்பதாரர் அரசாங்கத்தில் / உள்ளூராட்சி சேவையில் ஈடுபட்டிருந்தால் மாத்திரம்)

திரு./ திருமதி/ செல்வி ...................................................................................................................................... என்பவர் இந்தத் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கிறார் எனவும் அவரினது சேவையும் நடத்தையும் திருப்திகரமானதுவெனவும் இந்த அறிவித்தலில் விளக்கப்பட்டுள்ளவாறு கூறப்பட்ட பதவிக்கான தகைமைகளைக் கொண்டுள்ளாரெனவும் அவர் கூறப்பட்ட பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

.......................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

---

12-181/ 1

## வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு

கமரா இயக்குநர் (வீடியோ) - தரம் III - பதவி

வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சின் III ஆந் தரத்திலான கமரா இயக்குநர் (வீடியோ) பதவிக்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணபங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்ட விண்ணபங்கள் 2007.12.31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னராக "செயலாளர், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சு, 2 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கமரா இயக்குநர் (வீடியோ) - III ஆம் தர பதவி" என்பதனைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**குறிப்பு** - (அ) பின் காட்டப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) விண்ணப்பங்கள் தபாலின்போது இழந்துபோவது அல்லது தாமதித்தல் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் பற்றிக் கவனம் செலுத்தப்படமாட்டாது.

(இ) ஏற்கனவே பகிரங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர்மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) இந்தப் பதவிக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை 1 ஆகும் (ஒன்று).

2. **சேவையில் நியமிப்பதன் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்.**- (அ) இந்தப் பதவி நிரந்தரமானது. இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரியது. விதவை, அநாதை இளைப்பாற்றுச் சம்பள முறைக்கு சந்தாப்பணத்தைச் செலுத்த வேண்டும். நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்திற்குரியது.

(ஆ) இந்த வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (IIஅ) வின் ஆரம்பத்தில் காட்டப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகள் அதிகாரம் செலுத்துவதாய் அமையும்

(இ) அரச கரும மொழிக் கொள்கைக்கிணங்கியும் அரச நிருவாக சுற்றறிக்கை இல. 7/2007 இன் பிரகாரம் அரசகரும மொழித் தேர்ச்சி உரியகால எல்லைக்குள் பெறவேண்டும்.

3. **சம்பளமும் படிகளும்**.- பதவிக்குரிய மாதாந்த சம்பளம் பின்வருமாறு :-

(அ) ரூபா 14,000-10X120-11X140-6X210-14X290- ரூபா 22,060. (III/II 'ஆ' தரத்திற்காக ஏற்புடையது)

(ஆ) அரச நிருவாக சுற்றறிக்கை இல. 6/2006 இன் பிரகாரம் (MTI - 2006)

(இ) III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுபவர்கள் III ஆம் தரத்திற்கேற்ப ரூபா 14,000-10X120 ரூபா 15,200 சம்பளத்திட்டத்தின் ஆரம்ப சம்பளத்தில் வைக்கப்படுவார்கள்.

(ஈ) நியமனம் பெற்று 3 ஆண்டுகளுக்கு முன்னர் வினைத்திறமைக்காண் பரீட்சையில் சித்தி அடைய வேண்டும். வயதை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறமைக்காண் பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படமாட்டாது.

4. **தேவைப்படும் தகைமைகள்**.- (அ) இலங்கைப் பிரசையாக இருத்தல்.

(ஆ) சிறந்த ஒழுக்கநெறியுடையவராகவும் நல்ல தேகாரோக்கிமுடையவராகவும் இருத்தல்,

(இ) 2007.12.31 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு மேற்பட்டிருக்க வேண்டியதுடன் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல். (ஏற்கனவே அரசாங்க உள்ளூராட்சி சேவையில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதாகாது.)

5. **கல்வித் தகைமைகள்**.- (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் உட்பட 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது சித்தியடைந்திருத்தல். (ஒரு தடவையில் ஆகக்குறைந்தது 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

அல்லது

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட பாடங்களுட்பட 4 பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் தேசிய பொதுக் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (ஒரு தடவையில் ஆகக்குறைந்தது 5 பாடங்களில் சித்தியடைந்திருத்த வேண்டும்)

6. **தொழிற் தகைமைகள்**.- (அ) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையொன்றில் அல்லது தொழிற்கல்வி வித்தியாலயமொன்றில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனமொன்றில் இருந்து வழங்கப்பட்ட புகைப்படவியல் சம்பந்தப்பட்ட டிப்ளோமாச் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கல்வி சம்பந்தப்பட்ட நிறுவனமொன்றில் வழங்கப்பட்ட புகைப்படவியல் சம்பந்தமான ஓராண்டிற்குக் குறையாது அரைநேர தொழிற்பாடத்திட்டமொன்றை வெற்றிகரமான முறையில் பயின்று சான்றிதழ்களைப் பெற்றிருத்தல்.

7. **அனுபவம்**.- ஒரு புகைப்படக் கலைஞராக 5 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ்கள் மூலம் அதனை நிரூபிக்க வேண்டும்)

8. **ஆட்சேர்ப்புமுறை**.- நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் செய்முறைப் பரீட்சையொன்றின் மூலமும் ஆட்சேர்க்கப்படுவார்கள்.

டபிள்யு. பி. கணேகல,
செயலாளர்,
வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு.

வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு,
2 ஆவது மாடி,
"செத்சிறிபாய",
பத்தரமுல்லை,
2007, நவெம்பர் 9.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சு**

கமரா இயக்குநர் (வீடியோ) - தரம் III பதவி

1. முழுப் பெயர் (தெளிவாக) திரு./திருமதி/செல்வி :-----.

2. முதல் எழுத்துக்களுடன் பெயர் :-----.

3. முகவரி (முகவரி மாறினால் அதனை உடனே அறிவித்தல் வேண்டும்) :-
(அ) தனிப்பட்ட முகவரி :-----.
தொலைபேசி இல. :-----.

(ஆ) அலுவலக முகவரி :-----.
தொலைபேசி இல. :-----.

4. (அ) பிறந்த திகதி :-
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.
(ஆ) விண்ணப்பப்பத்திரங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு வயது :-
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.
(இ) தேசிய அடையாள அட்டையின் இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. நீர் இலங்கைப் பிரசையா ? :-----.

6. (அ) பால் - (ஆண்/பெண்) :-----.
(ஆ) திருமணமான/திருமணமாகாத தன்மை :-----.

7. பின்வரும் பாடங்களில் சித்தியடைந்துள்ள உயர் பரீட்சை :-
(1) சிங்களம் :-----.
(2) தமிழ் :-----.
(3) ஆங்கிலம் :-----.

8. கல்வி/தொழிற் தகைமைகள் :-----.

8.1 க. பொ. த. (சா. த.) /தே. பொ. க. சா. பரீட்சை :-

ஆண்டு :-----. சுட்டெண் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

8.2 க. பொ. த. (உ த.) :-

ஆண்டு :-----. சுட்டெண் :-----.

| பாடங்கள் | ஆண்டு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

8.3

| பட்டம்/டிப்ளோமா | ஆண்டு | பாடங்கள் |
|---|---|---|
| 1. | | |

9. ஏற்கனவே சேவை பார்ப்பதெனின் அதுபற்றிய விபரங்கள் :-

| நிறுவனம் | பதவி | இருந்து | வரை | வருடாந்த சம்பளம் |
|---|---|---|---|---|
| | | | | |

10. தொழிலிற்குரிய பிற தகைமைகள் :-----.

11. நீர் ஏதேனும் குற்றத்திற்கு எப்போதாவது நீதிமன்றமொன்றில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தீரா ? :-----.

12. நீர் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளீரா? (ஆம் எனின் விபரங்கள் தருக.) :-----.

13. பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப்பிரதிகள் அல்ல) இணைக்கப்பட்டுள்ளன.

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்வித் தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள் ;
(இ) தொழில் சம்பந்தப்பட்ட சான்றிதழ்கள் ;
(ஈ) அனுபவம் சம்பந்தப்பட்ட சான்றிதழ்கள்.

14. உங்களைப்பற்றிய விபரங்களை அறியக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர்களும் முகவரிகளும் (தொலைபேசி இலக்கங்களுடன்) :-
(1) :-----.
(2) :-----.

15. உரிய பிற தகவல்கள் :-----.

16. இந்த விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுமொழிகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்கள் ஏதேனும் உண்மையற்றதென அல்லது பிழையானவையென என்னைத் தெரிவுசெய்ய முன்னர் கண்டுபிடிக்கப்படின் நான் தகுதியற்றவனாவேன் எனவும், நியமனத்திற்குப் பின்னர் அதனைக் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடும் வழங்காமல் பதவியிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

.......................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

17. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

(விண்ணப்பதாரர் அரசாங்கத்தில் /உள்ளூராட்சி சேவையில் ஈடுபட்டிருந்தால் மாத்திரம்)

திரு./ திருமதி/ செல்வி ................................................................................................................................ என்பவர் இந்தத் திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கிறார் எனவும் அவரினது சேவையும் நடத்தையும் திருப்திகரமானதுவெனவும் இந்த அறிவித்தலில் விளக்கப்பட்டுள்ளவாறு கூறப்பட்ட பதவிக்கான தகைமைகளைக் கொண்டுள்ளாரெனவும் அவர் கூறப்பட்ட பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

.......................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

12-181/ 2

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 2.30 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5 என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்க.**

**அட்டவணை - 2007**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 07.12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.11.2007 |
| | | வெள்ளி | 14.12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.11.2007 |
| | | வியாழன் | 20 .12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.12.2007 |
| | | வெள்ளி | 28.12.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.12.2007 |

**அட்டவணை - 2008**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 04.01.2008 | .. | நண்பகல் 12 | வியாழன் | 20.12.2007 |
| | | வெள்ளி | 11.01.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.12.2007 |
| | | வெள்ளி | 18.01.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.01.2008 |
| | | வெள்ளி | 25.01.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.01.2008 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 01.02.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.01.2008 |
| | | வெள்ளி | 08.02.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.01.2008 |
| | | வெள்ளி | 15.02.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.02.2008 |
| | | வெள்ளி | 22.02.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.02.2008 |
| | | வெள்ளி | 29.02.2008 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.02.2008 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.